[திரு. பூண்டி கே. கலைவாணன்][2021 ஆகஸ்ட் 28

பசியோடு பயிலும் பச்சிளங்குழந்தைகளைக் கண்டு பரிதவித்து பள்ளியிலேயே மதிய உணவு தந்து உதவிய சர் பிட்டி. தியாகராயர் அவர்களுக்கும், கடைநிலை ஊழியம் மட்டுமே விதி என்றெண்ணி இருந்தவர்களை, முதல்நிலை ஆட்சியாளராகவும் வலம்வர வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தந்த திரு. டி.எம். நாயர் அவர்களுக்கும், காவேரிப் படுகையில் பிறந்ததன் பயனாக காவேரிப் படுகை விவசாயிகளின் துயர் துடைக்க புதிய கால்வாய் அமைத்துத் தந்த சர் எ.டி. பன்னீர்செல்வம் அவர்களுக்கும், மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு என்று உணர்த்திய அறிவுலக ஆசான் தந்தை பெரியார் அவர்களுக்கும், மாநில சுயாட்சியில் சமரசம் இல்லை என்று சமர் புரிந்த பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுக்கும், சுயமரியாதை, பெண்ணுரிமை, சமுதாய சமன்பாடு, தமிழ், தமிழக வளர்ச்சி என வாழ்ந்து, நின்ற தேர்தல்களிலெல்லாம் வென்ற, உலக அரங்கில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத எம் மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் எனது முதல் வணக்கத்தைக் கூறி, அவர் துயில்கொள்ளும் திசைநோக்கி வணங்கி எனது உரையைத் தொடர்கிறேன்.

61 ஆண்டு காலம் இந்த அவையை அலங்கரித்த தமிழ்த் தாயின் தலைமகன் அவர்களின் திருவுருவப் படத்தினை, இந்திய முதற் குடிமகனை வைத்துத் திறந்ததுடன், முத்தமிழறிஞர், எம் மண்ணின் மைந்தர் அவர்களுக்கு நினைவகம் எழுப்பிட அவையில் அறிவித்தது மட்டுமல்லாமல், நமது தொப்புள்கொடி உறவாம் ஈழத் தமிழ் சொந்தங்களின் வாழ்வில் ஒளியேற்றிட இலங்கை அகதிகள் முகாமில் அவர்களின் அடிப்படைத் தேவைகளான உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம் ஆகியவற்றை வழங்கி ஈழத் தமிழர்களின் நலனில் எம் மண்ணின் மைந்தர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு கிஞ்சிற்றும் நான் குறைந்தவன் அல்ல என்று நிரூபித்து. . . (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசுகிறபோது, நேற்றையதினம் நான் வெளியிட்ட அறிக்கை குறித்துத் தெரிவித்து, இலங்கைத் தமிழர்கள் இன்றைக்கு அகதிகளாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற வார்த்தையைச் சொன்னார்கள். நானும் நேற்று அப்படித்தான் சொன்னேன். ஆனால், இன்று முதல்

2021 ஆகஸ்ட் 28] [திரு. மு.க. ஸ்டாலின்]

இலங்கைத் தமிழ் அகதிகள் முகாம் என்று கூறாமல், 'இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்' என்று அழைக்கலாம். ஏனென்றால் அவர்கள் அனாதைகள் அல்ல; நாம் அவர்களுக்குத் துணையாக இருக்கிறோம். ஆகவே. அந்த உணர்வோடு இனிமேல் 'அகதிகள் முகாம்' என்றழைக்காமல், "இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்" என்றழைக்கப்படும் வகையில் அரசு ஆணையிட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கே. கலைவாணன் அவர்கள்.

முற்பகல் 11-45

திரு. பூண்டி கே. கலைவாணன்: மறத்தமிழர்கள் வாழ்வில் ஒளியேற்றிட, இன்னும் சொல்லப்போனால் நமது தமிழ்ச் சொந்தங்களின் 'அகதிகள் முகாம்' என்ற பெயரை மாற்றி 'இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்' என்று ஒரு புதிய பெயரை ஒட்டுமொத்த உலகத் தமிழர்களின், தமிழ்ச் சொந்தங்களின் சார்பாகவும் அறிவித்த (மேசையைத் தட்டும் ஒலி) கழகத் தலைவர், முதல்வர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை திருவாரூர் சட்டமன்றத் தொகுதியின் மக்கள் சார்பாகவும், மாவட்ட மக்கள் சார்பாகவும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனக்கு முன்னால் இந்த அவையில் பேசியவர்கள், 'தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும்' என்று பல்வேறு தருணங்களில் தலைவர், மாண்புமிகு முதல்வரைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார்கள். ஊனமுற்றோரை 'மாற்றுத் திறனாளி'யாகவும், மூன்றாம் பாலினத்தவரை 'திருநங்கைகளாகவும்' அறிவித்த, மண்ணின் மைந்தர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் வழித்தோன்றல் என்பதை இந்த அவைக்கு மீண்டும் மீண்டும் நிரூபிக்கும் எங்களது மண்ணின் மைந்தர், கழகத் தலைவர், முதல்வர் தளபதி அவர்களுக்கு மீண்டும் மீண்டும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமாத்திரமல்லாமல், இந்திய துணைப் பெருங்கண்டத்திலேயே, வேளாண் துறைக்கென முதல் நிதிநிலை அறிக்கையை அளித்து, தானும் ஒரு வேளாண்குடி என்பதை எங்களுக்கு மாத்திரமல்ல, எதிர்நிலையில் உள்ளவர்களுக்கும் உணர்த்திய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனைத் தொடர்ந்து, இன்று இந்த அவையில், ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்ட